# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண். 7/2010 நாள் 02.07.2010

1. தற்செயல் தேர்தல்கள் - காலியிட விவரம்

உள்ளாட்சிகளில் 30.04.2010 வரை ஏற்பட்ட கீழ்க்காணும் காலியிடங்களுக்கு 22.07.2010 அன்று தற்செயல் தேர்தல்களை நடத்திட தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் முடிவெடுத்துள்ளது. இதற்கான அறிவிக்கை 03.07.2010 அன்று வெளியிடப்படும். அன்று வேட்பு மனு தாக்கல் துவங்கும். வாக்குப் பதிவு 22.07.2010 அன்று காலை 7.00 மணிக்கு தொடங்கி மாலை 5.00 மணியுடன் முடிவடையும். வாக்கு எண்ணுகை 24.07.2010 அன்று நடைபெறும்.

### காலியிட விவரங்கள்

I. ஊரகம்

| வ.எண் | பதவியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | 4 |
| 2. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | 32 |
| 3. | சிற்றூராட்சித் தலைவர் | 94 |
| 4. | சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் | 710 |
| | மொத்தம் | 840 |

II. நகர்ப்புறம்

| வ.எண் | பதவியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாநகராட்சி வார்டு உறுப்பினர் | 1 |
| 2. | நகராட்சி வார்டு உறுப்பினர் | 13 |
| 3. | மூன்றாம் நிலை நகராட்சி வார்டு உறுப்பினர் | 7 |
| 4. | பேரூராட்சி வார்டு உறுப்பினர் | 62 |
| | மொத்தம் | 83 |
| | **பெருமொத்தம்** | **923** |

மொத்தம் 840 ஊரக உள்ளாட்சிப் பதவியிடங்கள் மற்றும் 83 நகர்ப்புற உள்ளாட்சிப் பதவியிடங்கள் ஆக மொத்தம் 923 பதவியிடங்கள் ஆகும். இவற்றில் கட்சி அடிப்படையில் தேர்தல்கள் நடைபெறும் பதவியிடங்கள் 119 ஆகும்.. அவற்றின் விவரம் வருமாறு -

மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்

நாமக்கல் மாவட்டத்தில் மாவட்ட ஊராட்சி வார்டு எண். 1, திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சி வார்டு எண். 33, திருவாரூர் மாவட்ட ஊராட்சி வார்டு எண் 17 மற்றும் வேலூர் மாவட்ட ஊராட்சி வார்டு எண். 29 ஆகியவற்றிற்கு தேர்தல் நடைபெறவுள்ளது.

ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள்

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம் வார்டு எண். 3, கடலூர் மாவட்டம் அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் வார்டு எண். 16, திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் வார்டு எண். 1 மற்றும் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் வார்டு எண். 12, ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 5 மற்றும் சென்னிமலை ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 11, காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 11, கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 21 மற்றும் வார்டு எண். 9 மற்றும் காவேரிபட்டினம் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 23, மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 2 மற்றும் டி.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 3, நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலம் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 19, மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 4 மற்றும் வேதாரண்யம் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 4, புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 5 மற்றும் கரம்பக்குடி ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 13, சேலம் மாவட்டம் எடப்பாடி ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 8, நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 6, திருவண்ணாமலை மாவட்டம் அனக்காவூர் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 7, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 1 மற்றும் உடன்குடி ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 2 மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 3, திருநெல்வேலி மாவட்டம் மானூர் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 12 மற்றும் வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 13, திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 7, திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 8, பூண்டி ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 3 மற்றும் சோழவரம் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 2 , வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 2, விழுப்புரம் மாவட்டம் முகையூர் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 27 மற்றும் தியாகதுர்கம் ஊராட்சி ஒன்றிய வார்டு எண். 11.

பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள்

அரியலூர் மாவட்டம் வரதராஜன்பேட்டை பேரூராட்சி வார்டு எண். 13 மற்றும் வார்டு எண். 4, கோயம்புத்தூர் மாவட்டம் கிணத்துக்கடவு பேரூராட்சி வார்டு எண். 4, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி வார்டு எண் 9, சிறுமுகை பேரூராட்சி வார்டு எண் 2, வீரபாண்டி பேரூராட்சி வார்டு எண் 14, கருமாத்தம்பட்டி பேரூராட்சி வார்டு எண். 9, வேடப்பட்டி பேரூராட்சி வார்டு எண். 11 மற்றும் சமத்தூர் பேரூராட்சி வார்டு எண் 5, கடலூர் மாவட்டம் புவனகிரி பேரூராட்சி வார்டு எண். 7 மற்றும் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி வார்டு எண் 14, தர்மபுரி மாவட்டம், கடத்தூர் பேரூராட்சி வார்டு எண் 3, திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு பேரூராட்சி வார்டு எண். 13, வடமதுரை பேரூராட்சி வார்டு எண். 3 மற்றும் ஆயக்குடி பேரூராட்சி வார்டு எண். 15, ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறை பேரூராட்சி வார்டு எண். 10, கன்னியாகுமரி மாவட்டம் ஏழுதேசம் பேரூராட்சி வார்டு எண் 10, திருவட்டாறு பேரூராட்சி வார்டு எண் 12, அழகப்பபுரம் பேரூராட்சி வார்டு எண். 1, பாலப்பள்ளம் பேரூராட்சி வார்டு எண். 12, புத்தலம் பேரூராட்சி வார்டு எண். 15 மற்றும் அழகியபாண்டிபுரம் பேரூராட்சி வார்டு எண். 1, கரூர் மாவட்டம், புஞ்சைபுகலூர் பேரூராட்சி வார்டு எண் 7, கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிபட்டினம் பேரூராட்சி வார்டு எண். 15, நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு பேரூராட்சி வார்டு எண். 13, நாமக்கல் மாவட்டம் பரமத்தி பேரூராட்சி வார்டு எண் 6, இராமநாதபுரம் மாவட்டம் கமுதி பேரூராட்சி வார்டு எண் 11, வார்டு எண். 12 மற்றும் வார்டு எண். 13 மற்றும் மண்டபம் பேரூராட்சி வார்டு எண். 14, சேலம் மாவட்டம் தெடாவூர் பேரூராட்சி வார்டு எண். 3 மற்றும் அரசிராமணி பேரூராட்சி வார்டு எண். 2, சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சி வார்டு எண். 6 மற்றும் மானாமதுரை பேரூராட்சி வார்டு எண் 2, தஞ்சாவூர் மாவட்டம் வேப்பத்தூர் பேரூராட்சி வார்டு எண் 15, நீலகிரி மாவட்டம் அதிகரட்டி பேரூராட்சி வார்டு எண். 15 மற்றும் ஓவெலி பேரூராட்சி வார்டு எண். 5, தேனி மாவட்டம், பண்ணைபுரம் பேரூராட்சி வார்டு எண் 1, வார்டு எண். 13, ஓடைப்பட்டி பேரூராட்சி வார்டு எண். 10 மற்றும் வீரபாண்டி பேரூராட்சி வார்டு எண். 14, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் பேரூராட்சி வார்டு எண். 9, எட்டயபுரம் பேரூராட்சி வார்டு எண். 13 மற்றும் கயத்தார் பேரூராட்சி வார்டு எண். 15, திருச்சிராப்பள்ளி மாவட்டம் தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி வார்டு எண். 13, புல்லம்பாடி பேரூராட்சி வார்டு எண். 6, மணச்சநல்லூர் பேரூராட்சி வார்டு எண். 2 மற்றும் பாலகிருஷ்ணம்பட்டி

பேரூராட்சி வார்டு எண். 12, திருநெல்வேலி மாவட்டம் பணகுடி பேரூராட்சி வார்டு எண். 14, வடக்கு வள்ளியூர் பேரூராட்சி வார்டு எண். 16, மேலகரம் பேரூராட்சி வார்டு எண். 7 மற்றும் புதூர் (எஸ்) பேரூராட்சி வார்டு எண். 7, திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி பேரூராட்சி வார்டு எண். 5, திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் பேரூராட்சி வார்டு எண். 1, பள்ளிப்பட்டு பேரூராட்சி வார்டு எண். 3, கும்மிடிப்பூண்டி பேரூராட்சி வார்டு எண். 10 மற்றும் நாரவாரிக்குப்பம் பேரூராட்சி வார்டு எண். 16, திருவண்ணாமலை மாவட்டம் கண்ணமங்கலம் பேரூராட்சி வார்டு எண். 5, வேலூர் மாவட்டம் பெண்ணாத்தூர் பேரூராட்சி வார்டு எண். 3, விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை பேரூராட்சி வார்டு எண். 11, விருதுநகர் மாவட்டம் செட்டியார்பட்டி பேரூராட்சி வார்டு எண். 13 மற்றும் டபிள்யு. புதுப்பட்டி பேரூராட்சி வார்டு எண். 9.

மூன்றாம் நிலை நகராட்சி வார்டு உறுப்பினர்கள்

கோயம்புத்தூர் மாவட்டம் குனியமுத்தூர் வார்டு எண் 15, ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி வார்டு எண். 13, நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வார்டு எண். 9, சேலம் மாவட்டம் நரசிங்கபுரம் வார்டு எண். 11, வேலூர் மாவட்டம் மேல்விஷாரம் வார்டு எண். 4, வார்டு எண். 5 மற்றும் வார்டு எண். 6.

நகராட்சி கவுன்சிலர்கள்

கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 1, நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1, சேலம் மாவட்டம் ஆத்தூர் நகராட்சி வார்டு எண். 28, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகராட்சி வார்டு எண். 34 மற்றும் வார்டு எண். 40, தேனி மாவட்டம் கம்பம் நகராட்சி வார்டு எண். 33 மற்றும் வார்டு எண். 21, திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடி நகராட்சி வார்டு எண். 16, வார்டு எண். 25 மற்றும் சங்கரன்கோவில் நகராட்சி வார்டு எண். 5, திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சி வார்டு எண். 5, வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகராட்சி வார்டு எண். 14, விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் நகராட்சி வார்டு எண். 27.

மாநகராட்சி கவுன்சிலர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண்..28

கட்சி அடிப்படையில் அல்லாத தேர்தல்கள்

சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்கள் 710 மற்றும் சிற்றூராட்சித் தலைவர் பதவியிடங்கள் 95 ஆக மொத்தம் 805 பதவியிடங்கள்.

2. தேர்தல் அட்டவணை

தேர்தல் அட்டவணை பின்வருமாறு-

| | | |
|---|---|---|
| 1.தேர்தல் அறிவிப்பு குறித்த பொது வெளியீடு மற்றும் வேட்பு மனுக்கள் பெறுவதற்கான ஆரம்ப நாள் | 03.07.2010 | மு.ப 11.00 முதல் பி.ப. 3.00 வரை |
| 2.வேட்பு மனுக்கள் பெறுவதற்கான கடைசி நாள் | 10.07.2010 | |
| 3.வேட்பு மனுக்கள் பரிசீலனை | 12.07.2010 | மு.ப 11.00 மணி |
| 4.வேட்பு மனு திரும்பப் பெறுதல் | 14.07.2010 | பி.ப. 3.00 வரை |
| 5.வாக்குப் பதிவு நாள் | 22.07.2010 | மு.ப 7.00 முதல் பி.ப 5.00 .வரை |
| 6.வாக்கு எண்ணிக்கை துவங்கும் நாள் | 24.07.2010 | மு.ப. 8.00 மணி |
| 7.தேர்தல் நடைமுறைகள் முடிவு பெறும் நாள் | 25.07.2010 | |

3. வாக்குச் சாவடிகள்

அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின்படி வருகின்ற தற்செயல் தேர்தல்களுக்கு நகர்ப்புற உள்ளாட்சிகளில் 100 வாக்குச்சாவடிகளும், ஊரக உள்ளாட்சிகளில் 1,934 வாக்குச் சாவடிகளும் ஆக மொத்தம் 2,034 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன.

4. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் - நகர்ப்புற உள்ளாட்சிகள்

செப்டம்பர் 2007 தற்செயல் தேர்தல்கள் முதல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதுவரை நடைபெற்ற செப்டம்பர் 2007, பிப்ரவரி 2008, செப்டம்பர் 2008, பிப்ரவரி 2009 மற்றும் அக்டோபர் 2009 தற்செயல் தேர்தல்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வெற்றிகரமாக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தற்போது நடைபெறவுள்ள தேர்தல்களிலும் நகர்ப்புற உள்ளாட்சிகளில் மட்டும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

5.வேட்பாளர் தேர்தல் செலவுக் கணக்கு

உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் மற்றும் தேர்தல் விதிமுறைகளின்படி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் செலவுக் கணக்குகளை தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யாதவர்களுக்கு உரிய விளக்கம் கோரப்பட்டு வாய்ப்புகளுக்குப் பின், தவறும்பட்சத்தில் 3 ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிட தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.

(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)

2/2/10

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்